**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 29.10.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 28.10.2020

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இராசிபுரம் நகராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் ஏற்கனவே உள்ள தாங்கு சுவர்களின்மீது மேற்கூரை அமைத்து (Light roof – GI Sheet) மின் வசதி செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிடப்பட்டது. அதற்கான கட்டணம் ரூ. 5198/– மினிட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(1335/20/இ1)

**தீர்மானம் எண். 884**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க அரசாணை (டி) எண். 492, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.09.2013–இல் ரூ. 5542/– இலட்சம் அனுமதிக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டம் கழிவுநீர் அமைக்கும் பணியின் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் தெருக்களில் கழிவுநீர் குழாய்களை பதிக்க இயலாத நிலையில் உள்ளது என 10.08.2020 அன்று செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் கோட்டம், இராசிபுரம் மற்றும் நகராட்சி பொறியாளர் இணைந்து செய்த கலந்தாய்வில் செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| மண்டலம் | இடம் | காரணம் |
|---|---|---|
| 1) Zone – I | பாராளுமன்ற உறுப்பினர் இல்லம் அருகில் – 31 மீ. நீளம் | தனியார் நிலம் – நில உரிமையாளர் கழிவுநீர் குழாய் அமைக்க தடை செய்துள்ளார். |
| 2) Zone – II | ராஜவாய்க்கால் பகுதி 690 மீ. நீளம் | நீதி மன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் கழிவுநீர் குழாய் அமைக்க இயலாது. |
| | மார்க்கெட் பகுதி – 144 மீ. நீளம் | குடியிருப்பு பகுதிகள் இல்லாத காரணத்தால் குழாய் பதிக்க அவசியம் இல்லை. |
| | காட்டூர் ரோடு – 1374 மீ. நீளம் | தனியார் நிலம் – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ளதாலும் குடியிருப்பு பகுதிகள் இல்லாத காரணத்தாலும் கழிவுநீர் குழாய் அமைக்க அவசியமில்லை. |
| 3) Zone – III | செல்வகணபதி தெரு 130 மீ. நீளம் | குறுகிய சந்து |
| 4) Zone – IV | மாரியம்மன் கோவில் அருகே 80 மீ. நீளம் | விவசாய நிலம் மேலும் தனியாருக்கு சொந்தமானது. |
| | நைனா செட்டி தோட்டம் 50 மீ. நீளம் | தனியார் – ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளிக்கு சொந்தமான நிலம். |

| | | |
|---|---|---|
| 5) Zone – VI | காமராஜர் நகர்<br>60 மீ. நீளம் | பாறைகள் அமைந்துள்ள பகுதி குழாய் பதிக்க இயலாத நிலையில் உள்ளது. |
| | காமராஜர் நகர்<br>120 மீ. நீளம் | பாறைகள் அமைந்துள்ள பகுதி குழாய் பதிக்க இயலாத நிலையில் உள்ளது. |

மேற்காணும் பகுதிகளில் நீதிமன்ற வழக்கு, குறுகிய சந்து, தனியார் நிலம், தரைமட்டத்தில் பாறையாக உள்ளது போன்ற காரணங்களால் கழிவுநீர் குழாய் பதிக்க இயலாததால் இப்பகுதிகளை குழாய் அமைப்பதிலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்காணும் நீளத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த வரைபடத்தில் விடுபட்டிருந்த தெருக்களில் மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாகவே கழிவுநீர் குழாய்களை அமைக்க செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் தெரிவிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3814/11/இ2)

**தீர்மானம் எண். 885**

அனுமதிக்கப்பட்டது.

(3) நகராட்சிக்குச் சொந்தமான நாமக்கல் ரோடு பகுதியிலுள்ள குறைந்த வருவாய் குடியிருப்புகளை தங்களுக்கே கிரையம் செய்து வழங்கக் கோரி ஓய்வுபெற்ற பணியாளர்களான (1) திரு மு. அத்தியப்பன், (2) திரு கொ. சுப்பராயன், (3) திருமதி ரமாபாய் ஆகியவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிக்கு எதிராக வழக்கு நீதிப் பேராணை எண். 1018/2013 முதல் 1020/2013 தொடரப்பட்டதில் 12.04.2019–ஆம் தேதி தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. தீர்ப்பாணையின் அடிப்படையில் அரசு செயலாளரின் கடித எண். 863/MA-V(Z)/2013-33, 34, 35 நாள் 30.07.2019–இல் குறைந்த வருவாய் குடியிருப்புகளைகிரையம் செய்து வழங்க இயலாதென மனுதாரர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்கள். 2194, 2196, 2175/2020 குடியிருப்புதாரர்களான (1) திரு மு. அத்தியப்பன், (2) திரு கொ. சுப்பராயன், (3) திருமதி ரமாபாய் ஆகியோர்களால் தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பாக திரு எம். ஏழுமலை, அரசு வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கு கட்டணம் ஒன்றிற்கு ரூ. 15000/– வீதம் மூன்று வழக்கிற்கு ரூ. 45000/– வழங்க கோரியுள்ளார். எனவே, அரசு வழக்கறிஞர், திரு எம். ஏழுமலை அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 45000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (282/13/அ2)

**தீர்மானம் எண். 886**

அனுமதிக்கப்பட்டது.

(4) மனுதாரர் திரு மு. கிருஷ்ணகுமார், த/பெ. முத்துசாமி, நெ.9, திருவள்ளுவர் சாலை, இராசிபுரம் என்பவர் இராசிபுரம் நகராட்சி வார்டு–B, பிளாக்–11, நகரளவை எண். 45/32, 45/3–இல் 1.33 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவு அங்கீகாரம் கோரி விண்ணப்பித்துள்ள பிரேரணை நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நகர் ஊரமைப்புத் துணை இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கடித ந.க.எண். 2734/2019/சேம3, நாள் 10.07.2013–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை ஒப்படைக்க தெரிவித்து சாலை அமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு

அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின் கம்பம் அமைக்கப்படும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் 04.05.2020–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் பரப்பளவு (228.96 ச.அடி) மற்றும் சாலைகள் பரப்பளவு 17016 ச.அடி நிலம் ஆவண எண். 1725/2020 மூலமாக இராசிபுரம் சார்நிலை கருவூலம் அலுவலகத்தில் தானமாக பத்திரம் மூலமாக பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்பட்டு மன்ற தீர்மான எண். 817, நாள் 28.05.2020 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 285/2020/நாமா/எண்.09/2020 நாள் 17.09.2020–இல் தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின் பேரில் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க இறுதி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 285/2020/நாமா/எண்.09/2020 நாள் 17.09.2020–இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின் பேரில் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க இறுதி ஒப்புதலுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(319/19/எப்1)

**தீர்மானம் எண். 887**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணி நடைபெற்று வருகிறது. நகரப் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகளவில் பரவி வருவதால் நோய் தொற்று பாதிக்கப்படும் வார்டுகளிலுள்ள தெருக்களில் வசிக்கும் பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கொண்டு செல்ல சில்வர் டிரம் (10 லிட்டர் கொள்ளளவு) – 10 எண்ணிக்கையில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 45000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4052/20/எச்1)

**தீர்மானம் எண். 888**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) தடுப்பு பணிகளுக்காக ஆட்டோவில் வைத்து கிருமிநாசினி தெளிக்க பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று Power Sprayer இயந்திரங்கள் பழுதாகிவிட்டதால், மேற்படி மூன்று Power Sprayer இயந்திரங்களை பழுது நீக்கம் செய்யவும், புதியதாக மூன்று Spray Handle வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4053/20/எச்1)

**தீர்மானம் எண். 889**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 7, 8, 15, 24 ஆகியப் பகுதியில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து சின்டெக்ஸ் டேங் வைத்து தண்ணீர் வசதி வழங்கும் டேங் பழுதடைந்து தண்ணீர் வழங்க முடியாமல் உள்ளது. உப்பு நீர் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4269/20/இ2)

**தீர்மானம் எண். 890**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 1, 2, 8, 11, 13 மற்றும் 18 ஆகியப் பகுதியில் TURIF சாலைப் பணிகளின்போது அப்பகுதியிலுள்ள உப்பு நீர் குழாய் முழுவதும் உடைந்து பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளது. மேற்கண்ட வார்டு பகுதிகளுக்கு புதியதாக குழாய் அமைத்து தண்ணீர் வசதி செய்து வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/– மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4270/20/இ2)

**தீர்மானம் எண். 891**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 23–இல் அங்காளம்மன் கோவில் அருகிலுள்ள சின்டெக்ஸ் டேங் மாற்றி அமைக்கவும் வார்டு எண். 26 காட்டூர் காட்டுக்கொட்டாய் சின்டெக்ஸ் டேங் பிளாட்பாரம் பழுதடைந்து தண்ணீர் வழங்க முடியாததால்
உப்பு நீர் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,50,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4271/20/இ2)

**தீர்மானம் எண். 892**

அனுமதிக்கப்பட்டது.

(10) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 21 செட்டியண்ணன் தெரு, வார்டு எண். 20 காந்தி நகர் பகுதி மற்றும் வார்டு எண். 27 சடையப்பா தெரு பகுதிக்கு சீரான முறையில் குடிநீர்

வழங்க அப்பகுதியில் உள்ள பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,20,000/– மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4272/20/இ2)

**தீர்மானம் எண். 893**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ. குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி.